# சிக்ரியை சேர்ந்தவருக்கு இளம் விஞ்ஞானி விருது



கணேஷ்

காரைக்குடி, ஜூலை 24–
காரைக்குடி மைய மின் வேதியியல் ஆய்வக விஞ்ஞானி கணேஷ்,35 இந்த ஆண்டிற்கான சி.எஸ்.ஐ.ஆர். இளம் விஞ்ஞானி விருது பெற்றுள்ளார். இதன் மூலம், தொடர்ந்து மூன்று முறை இந்த விருதினை பெற்ற ஆய்வகம் என்ற பெருமையை சிக்ரி பெற்றுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சி.எஸ்.ஐ.ஆர்., சார்பில், இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டு வருகிறது. 2012ல் சிக்ரியை சேர்ந்த லஷ்மி நரசிம்மன், 2013ல் எஸ்.கே.பட் ஆகியோர் பெற்றனர். இந்த ஆண்டு விஞ்ஞானி கணேஷ்க்கு வழங்கப்பட்டுள்ளது.

வரும் செப்.26ம் தேதி, புதுடில்லியில் நடக்கும் சி.எஸ்.ஐ.ஆர்., நிறுவன நாள் விழாவின் போது, பிரதமர் மோடியால் இவருக்கு விருது வழங்கப்பட உள்ளது. விருதுடன் ரூ.50 ஆயிரம் ரொக்கம், கேடயம், சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வீதம் 5 ஆண்டுக்கு, ஆய்வுக்கான நிதி உதவி, விருதுபெறுபவரின் 45 வயது நிறைவு பெறும் வரை மாதம் ரூ.7,500 மதிப்பு ஊதியம் வழங்கப்படும்.

விஞ்ஞானி கணேஷ்,35, மேற்கொண்ட அடிப்படை மற்றும் பயன்பாட்டிற்கான உகந்த மின்தகடுகள் மின்கரைசலுக்கு இடையேயான குறுக்கீட்டு பாதையில், எலக்ட்ரான்களின் பரிமாற்றம் குறித்த ஆய்வினை கவுரவித்து வழங்கப்பட்டுள்ளது. உலோகம் மற்றும் குறைமின் கடத்திகள் மின்கரைசலுடன் ஏற்படுத்தும் இணைப்பு படலமான பரப்பில் நிகழ்த்தப்படும் தேர்ந்த ஆய்வுகளின், முடிவுகள் மருத்துவ பரிசோதனை மற்றும் உடல் நல மேம்பாட்டிற்கான நுண்ணுணர்வுக் கருவிகளிலும், ஆற்றல்சார் உபகரணங்களிலும் பயன்படும் வகையில், அவர் வடிவமைத்ததால் இந்த விருதுக்கு தகுதி பெற்றுள்ளார்.

இவரது ஆய்வு முடிவானது தண்ணீரை சுத்திகரிக்கவும், நன்மை பயக்கும் பாக்டீரியாக்களை பிரித்தறியவும் பயன்பட வல்லது. உயிரிக் கழிவு மற்றும் ஆலைக்கழிவுகளிலிருந்து நுண்ணுயிர் சார்ந்த ஆற்றலை உற்பத்தி செய்யும் கலன்களின் உதவியுடன் மின் ஆற்றலை உற்பத்தி செய்ய முடியும் என்ற நோக்கில், இவர் மேற்கொண்டுள்ள ஆய்வும் குறிப்பிடத்தக்கது.

# காரைக்குடி சிக்ரி இளம் விஞ்ஞானி 3வது முறையாக விருதுக்கு தேர்வு



இளம் விஞ்ஞானி கணேஷ்.

காரைக்குடி, ஜூலை 24: காரைக்குடியில் உள்ள மத்திய மின் வேதியியல் ஆய்வக(சிக்ரி) விஞ்ஞானி கணேஷ் இளம் விஞ்ஞானிக்கான விருதுக்கு தேர்வு பெற்றுள்ளார். தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சிக்ரி விஞ்ஞானிகள் இந்த விருதினை பெற்று சாதனை படைத்து வருகின்றனர்.

காரைக்குடி சிக்ரி விஞ்ஞானி கணேஷ். இவர் மின் தகடுகள் மின் கரைசலுக்கு இடையேயான குறுக்கீட்டுப் பாதையில் எலக்ட்ரான்களின் பரிமாற்றம் குறித்த ஆய்வுக்கு சிஎஸ்ஐஆர் இளம் விஞ்ஞானி விருதுக்கு தேர்வு பெற்றுள்ளார். கடந்த 2012ம் ஆண்டுக்கு சிக்ரி விஞ்ஞானி லட்சுமிநரசிம்மன், 2013ம் ஆண்டுக்கு எஸ்கே பட் என்ற விஞ்ஞானிகள் இவ் விருதினை பெற்றுள்ளனர்.

தற்போது மூன்றாவது முறையாக சிக்ரியை சேர்ந்த விஞ்ஞானி விருதினை பெற்று ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளார். இவருக்கு வரும் செப்டம்பர் மாதம் 26ம் தேதி டெல்லியில் நடைபெறும் சிஎஸ்ஐஆர் நிறுவன நாள் விழாவில் பிரதமர் நரேந்திரமோடி விருதினையும், ரூ 50000 ரொக்கப் பணம், கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்குவார். அத்துடன் வருடத்திற்கு ரூ 5 லட்சம் வீதம் 5 வருடங்களுக்கு ஆய்வுக்கான நிதி உதவி மற்றும் விருது பெறுவார் 45 வயது நிறைவு பெறும் வரை மாதம் ரூ 7500 ஊதியம் வழங்கப்படும்.

இது குறித்து விஞ்ஞானி கணேஷ் கூறுகையில், மருத்துவ பரிசோதனை மற்றும் உடல்நல மேம்பாட்டிற்கான நுண்ணுணர்வுக் கருவிகளிலும், ஆற்றல் சார் உபகரணங்களில் பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மின் வேதியியல் ஆய்வுகள் இயற்பியல் மற்றும் வேதியியல் மாறுபாடுகளின் மூலம் எலக்ட்ரான் பரிமாற்றங்களில் நன்மை தரும் மாற்றங்களை தரவல்லவை. அதன்படி நானோ தொழில்நுட்பத்துடன் பிணைந்த துகள்கள், நுண்துகள்கள் மற்றும் பருவப் பொருட்களைக் கொண்டு நொதிப் பொருட்களின் அடிப்படையில் இயங்கும் மின்வேதியியல் உயிரி நுண்ணுணர்வுக் கருவிகளின் செயல்திறனை அதிகரிக்க முடியும். இந்த ஆய்வு முடிவுகள் தண்ணீரை சுத்திகரிக்கவும், நன்மை தரும் பாக்டீரியாக்களைப் பிரித்தரியவும் பயன்படும்.

மேலும் உயிரி கழிவு மற்றும் ஆலைக்கழிவுகளில் இருந்து நுண்ணுயிர் சார்ந்த ஆற்றலை உற்பத்தி செய்யும் கலன்களின் உதவியுடன் மின் ஆற்றலை உற்பத்தி செய்ய முடியும் என்றார்.

# CSIR Young Scientist award for CECRI faculty

Special Correspondent

**KARAIKUDI:** V. Ganesh, a scientist from the Council of Scientific and Industrial Research (CSIR) – Central Electrochemical Research Institute (CECRI), Karaikudi, has bagged the prestigious CSIR Young Scientist award for the year 2014.

This was the third consecutive year that a scientist from the institute received the award. The award would be presented to him by Prime Minister Narendra Modi in New Delhi on the occasion of the CSIR Foundation Day on September 26, an official release from the institute said.

The award carried a citation, a cash prize of Rs.50,000 and a plaque. Mr. Ganesh would also be entitled to have a research grant of Rs.5 lakh per year for a period of five years and an honorarium of Rs.7,500 per month till the age of 45 years, it said.

The award was conferred on him in recognition of his contributions to the fundamental and applied aspects of electron transport across the electrode–electrolyte interface.

"One of the highlights of his work is bio-imaging of microorganisms with size and shape-controlled fluorescent carbon nanoparticles. The finding can be applied to water purification and to differentiate between harmful and harmless bacteria."